தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 108/ந/2022
நாள் 23.05.2023

திரு.கி. விஜயராகவன்,
கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கூத்தாநல்லூர் நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், லெட்சுமாங்குடி, மரக்கடை, R.G.S.T தெரு, கதவு எண்.43–A என்ற முகவரியில் வசிக்கும் திரு.கி. விஜயராகவன் என்பவரின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.04.2023 அன்று பெறப்பட்டு 108/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், லெட்சுமாங்குடி, மரக்கடை, R.G.S.T தெரு, கதவு எண்.43–A என்ற முகவரியில் வசிக்கும் திரு.கி. விஜயராகவன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், நகராட்சியில் ஆணையராக உள்ள திரு.குமரிமன்னன் என்பவர் சட்டத்திற்கு புறம்பாகவும் மேலும் துளிகூட மனிதாபிமானம் அற்ற செயல்களிலும் ஈடுபட்டுவருகிறார். உதாரணமாக நகராட்சியில் தன்னிச்சையாக மன்ற அனுமதி பெறாமலும், நகர்மன்ற தலைவரிடத்தில் எந்தவொரு முன்அனுமதியும் வாங்காமலும் முறைகேடாக கூத்தாநல்லூர் நகராட்சியில் பணிபுரியும் பில்கலெக்டர்ஸ் மற்றும் காசாளர் H1, E1 மற்றும் எலக்ட்ரீசியன் (ரவி, காந்திமதி, சக்திவேல், ஆபிரகாம், அய்யப்பன் மற்றும் செந்தில்) இவர்களின் பெயர்களில் தலா ரூ 50,000/– லேப்டாப் வாங்குவதற்கென்று நகராட்சி மூலமாக லோன் போட்டு முறைகேடாக அந்த பணத்தை தான் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காக அனைவரையும் மிரட்டல் விடுத்து அவர்களிடமிருந்து அந்த பணத்தை பறித்து கொண்டார். மேலும் சட்டத்திற்கு புறம்பாக நகராட்சி பணத்தை கையாடல் செய்துள்ளார். ஆகையால் அய்யா அவர்கள் கூத்தாநல்லூர் நகராட்சியில் நடந்துவரும் அடுக்கடுக்கான ஊழல்களை கண்டறிந்து ஆணையர் திரு. குமரிமன்னன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் தனது 09.05.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலக நிரந்தர பணியாளர்கள் மடிக்கணினி முன்பணம் வழங்கிட கோரி விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.231, நிதித்துறை நாள் 01.04.1992–ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி மடிக்கணினியை நபர் ஒருவருக்கு ரூ 50,000/– வீதம் வழங்க மடிக்கணினி முன்பணம் அனுமதித்து அவரவர் வங்கி கணக்கின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருமண முன்பணம், வாகன முன்பணம், பண்டிகை முன்பணம், சம்பள முன்பணம், அவசர அவசிய நகராட்சி பணிகளுக்கு முன்பணம் மற்றும் இதர முன்பணம் வழங்கிட மன்ற அனுமதியின்றி துறைத்தலைவரால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி மடிக்கணினி முன்பணமும் மேற்படி முன்பணம் வழங்கியவாறே துறைத் தலைவரின் ஒப்புதலின் பேரில் நபர் ஒருவருக்கு ரூ.50,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மடிக்கணினி வழங்கிட அரசாணை அனுமதித்தாலே போதுமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. பண்டிகை முன்பணம் வழங்க மேற்படி முன்பணத்தை 10 சமதவணைகளில் பிடித்தம் செய்திட செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி திருமதி.சி.காந்திமதி, வருவாய் உதவியாளர், திரு.ர.ரவி, வருவாய் உதவியாளர், திரு.கு.அய்யப்பன், வருவாய் உதவியாளர், திரு.வி.செந்தில் (எ) கிருஷ்ணமூர்த்தி, மின்கம்பி உதவியாளர், திரு.த.ஆப்ரகாம்லிங்கன், இளநிலை உதவியாளர், திரு.ஞா.சக்திவேல், இளநிலை உதவியாளர் ஆகியோரின் ஏப்ரல் 2023 ஆம் மாத ஊதியத்தில் முதல் தவணையாக ரூ 5,000/– பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி பணியாளர்கள் பண்டிகை முன்பணம், வாகன முன்பணம் மற்றும் இதர முன்பணங்கள் வழங்கி மாதமாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் ஈடுசெய்யப்படும். மேற்படி முன்பணங்கள் வழங்குவது வரையறுக்கப்பட்ட ஆணை என்பதால் முன்பணங்கள் வழங்கப்படும் பொழுது மன்ற அனுமதி ஏதும் பெறப்படுவதில்லை. நகராட்சி முன்பணங்கள் துறைத்தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

அதன் அடிப்படையில் மேற்படி பணியாளர்களுக்கு அரசாணையின்படி அவரவர் வங்கி கணக்கிற்கு முன்பணம் வழங்கி அவரவரின் 2023 ஏப்ரல் மாத ஊதியத்திலிருந்து முன்பணத் தொகை நகராட்சி கணக்கில் ஈடுசெய்யப்பட்டு வருகிறது.

முறையீட்டு மனு அளித்த திரு.கி.விஜயராகவன் என்பவர் குறிப்பிட்டுள்ளவாறு எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. இவர் நகராட்சி ஆணையரை மிரட்டி ஆதாயம் தேடும் வகையில் களங்கம் ஏற்படுத்தியும், நகராட்சி ஆணையரை மிரட்டியும் ஆதாயம் தேடும் நோக்கில் ஆணையருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்திட பொய்யான புகாரை சுமத்தியும் மிரட்டியும் வருகிறார் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரும் 10.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.கி. விஜயராகவன் 10.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சியின் ஆணையர் திரு. குமரிமன்னன் என்பவர் நகர்மன்ற அனுமதியின்றி தன்னிச்சையாக நகராட்சியில் பணியாற்றும் பில் கலெக்டர், காசாளர், எல்க்ட்ரீசியன் போன்ற 6 பணியாளர்களின் பெயர்களில், தலா ரூபாய் 50,000/– வீதம் நகராட்சி நிதியை அளித்து, அத்தொகை அவர்கள் லேப்–டாப் வாங்குவதற்காக அளிக்கப்பட்டது என தெரிவித்து, அப்பணத்தை மேற்கண்ட நகராட்சிப் பணியாளர்களிடம் மீண்டும் ஆணையரே பெற்றுக்கொண்டுள்ளார். இவ்வாறு நகராட்சியின் பணத்தை கையாடல் செய்துள்ள ஆணையர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட கடன்தொகையாக வழங்கப்பட்ட தொகையை நகராட்சி கணக்கில் சேர்த்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் 10.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கூத்தாநல்லூர் நகராட்சியில் பணியாற்றும் 6 பணியாளர்கள் மடிக்கணினி வாங்குவதற்காக முன்பணம் வழங்கிடக் கோரி விண்ணப்பம் அளித்திருந்தனர். நகராட்சிப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம், சம்பள முன்பணம் போன்ற தொகைகள் மன்ற அனுமதியின்றி வழக்கமாக ஆணையரால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட 6 பணியாளர்களுக்கு தலா ரூபாய் 50,000 வீதம் 5.4.2023 அன்று வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகை மேற்கண்ட பணியாளர்களின் கணக்கிலேயே வரவு வைக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட கடன்தொகை 10 தவணையில் செலுத்த பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். மேற்கண்ட பணியாளர்களின் மாத ஊதியத்தில் முதல் தவணையாக ரூபாய் 5,000/– வீதம் பிடித்தம் செய்யப்பட்டு நகராட்சி கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 9.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரைச் சேர்ந்த மனுதாரர் திரு.கி.விஜயராகவன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளர் தன்னிச்சையாக 6 நகராட்சி பணியாளர்களின் பெயர்களில் தலா ரூ 50,000/– வீதம், மடிக்கணினியை நகராட்சி நிதி மூலம் வாங்கும் பொருட்டு கடனாக அளித்து, அப்பணத்தை பணியாளர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதன் மூலம் நகராட்சி ஆணையாளர் நகராட்சி நிதியினை முறைகேடாக கையாடல் செய்துள்ளார் என புகாராக தெரிவித்துள்ளார்.

கூத்தாநல்லூர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் 6 பணியாளர்கள் சொந்த காரணங்களுக்காக மடிக்கணினியை வாங்கும் பொருட்டு முன்பணம் வழங்கக் கோரிய விண்ணப்பத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையாளரால் அரசாணை நிலை எண்.231 நிதித்துறை நாள் 01.04.1992–ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகராட்சியில் பணிபுரியும்

திருமதி.காந்திமதி, திருவாளர்கள். ரவி, அய்யப்பன், ஆப்ரகாம்லிங்கன், செந்தில் மற்றும் சக்திவேல் ஆகிய 6 பணியாளர்களுக்கு தலா ரூ 50,000/– வீதம் மடிக்கணினியை அவர்களது சொந்த பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யும் பொருட்டு நகராட்சி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு அவர்களது மாத ஊதியத்தில் ரூ 5,000/– வீதம் 10 மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும் வகையில் முதல் தவணையாக ரூ 5,000/– தொகை அவர்களின் 2023 ஏப்ரல் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. பண்டிகை முன்பணம், திருமண முன்பணம் போன்ற கடன் தொகை வழங்குவதற்கு துறைத்தலைவரின் அனுமதி பெற்றாலே போதுமானது என்பதாலும் மற்றும் மன்ற அனுமதி தேவையில்லை என்பதாலும் மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி, துறைத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்காணும் பணியாளர்களுக்கு கணினி முன்பணம் வழங்கப்பட்டு முறையாக அவர்களது ஊதியத்திலும் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மேலும் நகராட்சி ஆணையாளரால் மடிக்கணினி முன்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பதை மடிக்கணினி முன்பணம் பெற்றுக் கொண்ட சம்பந்தப்பட்ட எந்தவொரு பணியாளர்களிடமிருந்தும் எவ்வித புகாரும் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில், மனுதாரரின் புகாரினை நிரூபிக்க போதுமான ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கி.விஜயராகவன்,
கதவு எண்.43–A, R.G.S.T தெரு,
லெட்சுமாங்குடி, கூத்தாநல்லூர்– 614 102,
திருவாரூர் மாவட்டம்.

2) ஆணையாளர், கூத்தாநல்லூர் நகராட்சி,
கூத்தாநல்லூர் – 614 101, திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/5/23

உதவிப்பதிவாளர்